جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخـبـر

# புனித மிகு மக்காவின் சிறப்புகள்

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 1

اِنَّ اَوَّلَ بَيۡتٍ وُّضِعَ لِلنَّاسِ لَـلَّذِىۡ

بِبَكَّةَ مُبٰرَكًا وَّهُدًى لِّلۡعٰلَمِيۡنَ‌ۚ

(இறை வணக்கத்திற்கு என்று) மனிதர்களுக்காக வைக்கப் பெற்ற முதல் வீடு நிச்சயமாக பக்காவில் (மக்காவில்) உள்ளது தான். அது பரக்கத்து (பாக்கியம்) மிக்கதாகவும், உலக மக்கள் யாவருக்கும் நேர்வழியாகவும் இருக்கிறது.



அல்குர்ஆன் 3:96

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 2

إِنَّمَآ أُمِرْتُ أَنْ أَعْبُدَ رَبَّ هَٰذِهِ الْبَلْدَةِ الَّذِي حَرَّمَهَا وَلَهُۥ كُلُّ شَيْءٍ
وَأُمِرْتُ أَنْ أَكُونَ مِنَ الْمُسْلِمِينَ

இந்த ஊரை எவன் கண்ணியப்படுத்தி
உள்ளானோ அந்த இறைவனை வணங்குமாறு நான் கட்டளையிடப்
பட்டுள்ளேன். எல்லாப் பொருட்களும் அவனுக்கே உரியன. அன்றியும்
அவனுக்கே முற்றிலும் வழிபட்டவனாக இருக்கும்படியும் நான்
ஏவப்பட்டுள்ளேன். (என்று நபியே! நீர் கூறுவீராக).




அல்குர்ஆன் 27:91

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 3

أَوَلَمْ يَرَوْا أَنَّا جَعَلْنَا حَرَمًا آمِنًا وَّيُتَخَطَّفُ النَّاسُ مِنْ حَوْلِهِمْ
أَفَبِالْبَاطِلِ يُؤْمِنُونَ وَبِنِعْمَةِ اللَّهِ يَكْفُرُونَ

**அன்றியும் (மக்காவைச்) சூழவுள்ள மனிதர்கள் (பகைவர்களால்) இறாய்ஞ்சிச் செல்லப்படும் நிலையில் (இதை) நாம் பாதுகாப்பான புனிதத் தலமாக ஆக்கியிருப்பதை அவர்கள் பார்க்கவில்லையா? இன்னும், அவர்கள் பொய்யானவற்றை நம்பி, அல்லாஹ்வின் அருட்கொடையை நிராகரிக்கிறார்களா?**



**அல்குர்ஆன் 29:67**

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 4

وَاِذْ قَالَ اِبْرٰهِيْمُ رَبِّ اجْعَلْ هٰذَا الْبَلَدَ اٰمِنًا

நினைவு கூறுங்கள்! "என் இறைவனே! இந்த ஊரை (மக்காவை சமாதானமுள்ளதாய்) அச்சம் தீர்ந்ததாய் ஆக்குவாயாக! என்று இப்ராஹீம் கூறியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூறும்).



அல்குர்ஆன் 14:35

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 5

لَآ اُقْسِمُ بِهٰذَا الْبَلَدِ وَاَنْتَ حِلٌّۢ بِهٰذَا الْبَلَدِ


وَوَالِدٍ وَّمَا وَلَدَ لَقَدْ خَلَقْنَا الْاِنْسَانَ فِىْ كَبَدٍ

இந்நகரத்தின் மீது நான் சத்தியம் செய்கின்றேன்.

நீர் இந்நகரத்தில் (சுதந்திரமாகத்) தங்கியிருக்கும் நிலையில்,

பெற்றோர் மீதும், (பெற்ற) சந்ததியின் மீதும் சத்தியமாக,

திடமாக, நாம் மனிதனைக் கஷ்டத்தில் (உள்ளவனாகப்) படைத்தோம்.



அல்குர்ஆன் 90:1-4

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 6

وَهٰذَا الْبَلَدِ الْاَمِيْنِ

மேலும் அபயமளிக்கும் இந்த (மக்கமா) நகரத்தின் மீதும் சத்தியமாக



அல்குர்ஆன் 95: 3

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 7

وَكَذٰلِكَ اَوۡحَيۡنَاۤ اِلَيۡكَ قُرۡاٰنًا عَرَبِيًّا لِّتُنۡذِرَ اُمَّ الۡقُرٰى وَمَنۡ حَوۡلَهَا
وَتُنۡذِرَ يَوۡمَ الۡجَمۡعِ لَا رَيۡبَ فِيۡهِ‌ فَرِيۡقٌ فِى الۡجَنَّةِ وَفَرِيۡقٌ فِى السَّعِيۡرِ

அவ்வாறே நகரங்களின் தாய்க்கும், (மக்காவுக்கும்) அதனைச் சுற்றியுள்ளவற்றுக்கும் அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும், எவ்வித சந்தேகமுமின்றி (யாவரும்) ஒன்று சேர்க்கப்படும் நாளைப்பற்றி அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும், அரபி மொழியிலான இந்த குர்ஆனை நாம் உமக்கு வஹீ அறிவிக்கிறோம். ஒரு கூட்டம் சுவர்க்கத்திலும் ஒரு கூட்டம் நரகத்திலும் இருக்கும்.



அல்குர்ஆன் 42:7

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 8-A

நபி (ﷺ) அவர்கள் மக்காவை வெற்றி கண்ட நாளில், "இனி (மக்காவிலிருந்து) புலம்பெயர்தல் (ஹிஜ்ரத்) என்பது கிடையாது என்றாலும், அறப்போர் புரிவதும் அதற்காக(வும் மற்ற நற்செயல்கள் புரியவும்) நாட்டம் கொள்வதும்தான் இருக்கிறது. நீங்கள் போருக்காக அழைக் கப்பட்டால் புறப்படுங்கள்.

வானங்களையும் பூமியையும் படைத்த நாள் முதல் அல்லாஹ் இந்த ஊரைப் புனிதப்படுத்தி யிருக்கிறான், அவன் புனிதப்படுத்திய காரணத்தால் மறுமை நாள்வரை இவ்வூர் புனிமானதாகவே இருக்கும். எனக்கு முன்னர் எவருக்கும் இங்கு போர் செய்ய அனுமதி அளிக்கப்படவில்லை, எனக்குக்கூட பகலில் சிறிது நேரம் (மட்டுமே) அனுமதிக்கப்பட்மிடது.

அல்லாஹ் புனிதப்படுத்தி இருப்பதால், மறுமை நாள்வரை இவ்வூர் புனிதமான தாகவே விளங்கும். இங்குள்ள முட்கள் வெட்டப்படக் கூடாது; வேட்டைப் பிராணி விரட்டப்படக் கூடாது; இங்கே கீழே விழுந்துகிடக்கும் பொருளை, அதை அறிவிப்புச் செய்(து உரியவரிடம் சேர்ப்)பவர் தவிர மற்றவர் எடுக்கக் கூடாது. இங்குள்ள புற்பூண்டுகள் பறிக்கப்படக் கூடாது!" என்று கூறினார்கள்.

அப்போது "அல்லாஹ்வின் தூதரே! இத்கிர் எனும் புல்லைத் தவிரவா? ஏனெனில், அது வீடுகளுக்கும் உலோகத் தொழிலாளர்களுக்கும் பயன்படுகிறது" என்று (என் தந்தை) அப்பாஸ் (ரலி) அவர்கள் கேட்க, நபி (ﷺ) அவர்கள், "இத்கிரைத் தவிர" என்று பதிலளித்தார்கள்.



அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 1834

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 8-B

அல்லாஹ் புனிதப்படுத்தி இருப்பதால், மறுமை நாள்வரை இவ்வூர் புனிதமான தாகவே விளங்கும். இங்குள்ள முட்கள் வெட்டப்படக் கூடாது; வேட்டைப் பிராணி விரட்டப்படக் கூடாது; இங்கே கீழே விழுந்துகிடக்கும் பொருளை, அதை அறிவிப்புச் செய்(து உரியவரிடம் சேர்ப்)பவர் தவிர மற்றவர் எடுக்கக் கூடாது. இங்குள்ள புற்பூண்டுகள் பறிக்கப்படக் கூடாது!" என்று கூறினார்கள்.

அப்போது "அல்லாஹ்வின் தூதரே! இத்கிர் எனும் புல்லைத் தவிரவா? ஏனெனில், அது வீடுகளுக்கும் உலோகத் தொழிலாளர்களுக்கும் பயன்படுகிறது" என்று (என் தந்தை) அப்பாஸ் (ரலி) அவர்கள் கேட்க, நபி (ﷺ) அவர்கள், "இத்கிரைத் தவிர" என்று பதிலளித்தார்கள்.




அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 1834

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 9

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்தார்கள். நான், இதன் (அதாவது மதீனாவின்) இரு கருங்கல் மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியைப் புனிதமானதாக அறிவிக்கிறேன்.



அறிவிப்பாளர்: ராஃபிஉ பின் கதீஜ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2643

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 10

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மக்காவிற்குள் ஆயுதம் எடுத்துச் செல்வதற்கு
உங்களில் எவருக்கும் அனுமதி இல்லை.



அறிவிப்பாளர்: ஜாபிர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2636

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 11

ஹஜ்ஜை, உம்ராவை நாடி மக்காவுக்கு வருவோர் நபி (ﷺ) அவர்கள் வகுத்துத் தந்த குறிப்பிட்ட எல்லையில் இஹ்ராம் அணிந்து நிய்யத் வைக்க வைக்க வேண்டும்.



அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 1526 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 12

அல்லாஹ்வின் மீது சத்தியமாக ! அல்லாஹ்வின் பூமிகளில் நீ மிகச் சிறந்த பூமியாகும், அல்லாஹ்வின் பூமிகளில் நீ அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான பூமியாகும். உன்னிலிருந்து நான் வெளியேற்றப்படாவிட்டால் நான் வெளியேறியிருக்க மாட்டேன் என நபி (ﷺ) அவர்கள் மக்காவைப் பார்த்துக் கூறினார்கள்.



அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அதிய் இப்னுல் ஹம்ராஃ (ரலி) அவர்கள், திர்மிதி 3925

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 13-A

وَقَالُوٓا اِنْ نَّتَّبِعِ الْهُدٰى مَعَكَ نُتَخَطَّفْ
مِنْ اَرْضِنَا اَوَلَمْ نُمَكِّنْ لَّهُمْ حَرَمًا اٰمِنًا
يُّجْبٰٓى اِلَيْهِ ثَمَرٰتُ كُلِّ شَىْءٍ رِّزْقًا مِّنْ لَّدُنَّا
وَلٰكِنَّ اَكْثَرَهُمْ لَا يَعْلَمُوْنَ



அல்குர்ஆன் 28:57

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 13-B

இன்னும் அவர்கள்: "நாங்கள் உம்முடன் சேர்ந்து இந்நேர் வழியை (குர்ஆனை) பின்பற்றுவோமானால் எங்கள் நாட்டைவிட்டு நாங்கள் தூக்கி எறியப்படுவோம்" என்று கூறுகிறார்கள். நாம் அவர்களைச் சங்கையான இடத்தில் பாதுகாப்பாக வசிக்கும்படி வைக்கவில்லையா? அவ்விடத்தில் ஒவ்வொரு வகைக் கனிவர்க்கமும் நம்மிடமிருந்துள்ள உணவாகக் கொண்டுவரப்படுகிறது, எனினும் அவர்களில் பெரும்பாலோர் இதை அறிய மாட்டார்கள்.



அல்குர்ஆன் 28:57

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 14

وَاَذِّنْ فِى النَّاسِ بِالْحَجِّ يَاْتُوْكَ رِجَالًا وَّعَلٰى كُلِّ ضَامِرٍ يَّاْتِيْنَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيْقٍ

**ஹஜ்ஜை பற்றி மக்களுக்கு அறிவிப்பீராக! அவர்கள் நடந்தும், வெகு தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஒட்டகங்களின் மீதும் உம்மிடம் வருவார்கள் (எனக் கூறினோம்).**



**அல்குர்ஆன் 22:27**

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 15

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் (துல்ஹிஜ்ஜா பத்தாம் நாளில் மக்காவில்) மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள்.

அப்போது "இது எந்த நாள் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார்கள். மக்கள் "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிந்தவர்கள்" என்று கூறினார்கள். அந்த நாளுக்கு அவர்கள் வேறு பெயர் சூட்டுவார்களோ என்று நாங்கள் எண்ணினோம். (அந்த அளவுக்கு மௌனமாக இருந்தார்கள்.)

பிறகு "இது நஹ்ர் உடைய (துல்ஹிஜ்ஜா 10ஆம்) நாள் அல்லவா?" என்று கேட்டார்கள். நாங்கள் "ஆம், அல்லாஹ்வின் தூதரே" என்று சொன்னோம். நபியவர்கள், "இது எந்த ஊர்? இது புனித நகரமல்லவா?" என்று கேட்டார்கள். நாங்கள் "ஆம், அல்லாஹ்வின் தூதரே!" என்று சொன்னோம்.

நபி (ﷺ) அவர்கள், "அவ்வாறாயின், (புனிதம் வாய்ந்த) உங்களது இந்த நகரத்தில் உங்களுடைய (புனிதமான) இந்த மாதத்தில் இந்த நாள் எவ்வளவு புனிதமானதோ அந்த அளவுக்கு உங்கள் உயிர்களும் உங்கள் செல்வங்களும் உங்களது மானமும் உங்கள் உடல்களும் உங்களுக்குப் புனிதமானவையே"



அறிவிப்பாளர்: அபூபக்ரா (ரலி) அவர்கள், புகாரி 7078 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 16


## ஹுதைபியா வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு

(அல்மிரார் எனும்) மலைப் பாதைக்கு வந்தார்கள். அங்கிருந்துதான் குறைஷியரைப் போய்ச் சேர முடியும். அங்கு நபி (ﷺ) அவர்களின் ஊர்தி ஒட்டகம் மண்டியிட்டு அமர்ந்துகொண்டது. மக்கள் (அதை எழுப்பி நடக்க வைப்பதற்காக) ஹல்ஹல்' என்று அதட்டினார்கள். அது எழும்ப மறுத்து முரண்டு பிடித்தது. உடனே, மக்கள், கஸ்வா' பிடிவாதம் பிடிக்கிறது, கஸ்வா' பிடிவாதம் பிடிக்கிறது என்று கூறினார்கள்.

நபி (ﷺ) அவர்கள், "கஸ்வா பிடிவாதம் பிடிக்கவுமில்லை, பிடிவாதம் பிடிப்பது அதன் குணமுமில்லை. மாறாக, (யமன் நாட்டு மன்னன் அப்ரஹா தலைமையில் யானைப் படை கஅபாவை இடிக்க வந்தபோது) யானையைத் தடுத்த (இறை)வனே அதையும் தடுத்துவைத்திருக் கின்றான்" என்று கூறினார்கள்.

பிறகு, "என் உயிர் யாரது கையில் உள்ளதோ அவன்மீது சத்தியமாக! (போரைக் கைவிட்டு) அல்லாஹ்வின் புனிதத்(த் தல)ங்களைக் கண்ணியப்படுத்தும் ஒரு திட்டத்தை அவர்கள் என்னிடம் கேட்டால் அதை நிச்சயம் அவர்களுக்கு நான் வழங்குவேன்" என்று கூறினார்கள்.


பிறகு நபி (ﷺ) அவர்கள் தமது ஒட்டகத்தைத் தட்டி எழுப்பினார்கள். உடனே அது குதித்தெழுந்தது.



அறிவிப்பாளர்: மிஸ்வர் பின் மக்ரமா (ரலி) அவர்கள், புகாரி 2731 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 17

’உன்னை விட சிறந்த, எனக்கு விருப்பமான ஓர் ஊரில்லை உன் சமுதாயம் உன்னை விட்டு என்னை வெளியேற்றிருக்காவிட்டால் நான் உன்னை விட்டு வேறெங்கும் குடிபெயர்ந்திருக்க மாட்டேன்’ என மக்காவைப் பார்த்து நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.



அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், திர்மிதி 3926

நபி (ﷺ) அவர்கள், "இறைவா! மக்காவில் நீ ஏற்படுத்திய வளத்தை (பரக்கத்) போன்று இரு மடங்கை மதீனாவில் ஏற்படுத்துவாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.



அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், புகாரி 1885

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 19

’இறைவா! நாங்கள் மக்காவை

நேசித்ததைப் போன்று, அல்லது

அதைவிட அதிகமாக மதீனாவை எங்கள்

நேசத்திற்கு உரியதாக ஆக்குவாயாக!



அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 1889 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 20

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்து, மக்காவாசிகளுக்காகப் பிரார்த்தித்தார்கள்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவைப் புனித நகரமாக அறிவித்ததைப் போன்று நான் மதீனாவைப் புனித நகரமாக அறிவிக்கிறேன்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவாசிகளுக்காகப் பிரார்த்தித்ததைப் போன்று நான் மதீனாவின் (அளவைகளான) 'ஸாஉ'மற்றும் 'முத்'து ஆகியவற்றில் இரு மடங்கு (வளம் ஏற்படப்) பிரார்த்திக்கிறேன்.




அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் ஸைத் பின் ஆஸிம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2641

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 21

இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்கள் உன் அடியாரும் உன் உற்ற நண்பரும் உன் தூதரும் ஆவார்கள். நான் உன் அடிமையும் தூதரும் ஆவேன்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்கா நகருக்காக உன்னிடம் பிரார்த்தித்ததைப் போன்று நான் மதீனாவிற்காக உன்னிடம் பிரார்த்திக்கிறேன். அவர்கள் மக்காவிற்காகப் பிரார்த்தித்த அளவிற்கு,அல்லது அதனுடன் மற்றொரு மடங்கும் (வளம் வேண்டி) நான் பிரார்த்திக்கிறேன்' என நபி (ﷺ) அவர்கள் பிரார்த்தித்தார்கள்



அறிவிப்பாளர்:அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2660 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 22

## மக்காவாசிகளுக்கு இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரார்த்தனை

இப்ராஹீம் (அலை) அவர்கள், "இறைவா! இவர்களுக்கு இறைச்சியிலும் தண்ணீரிலும் வளத்தை அளிப்பாயாக!" என்று பிரார்த்தனை புரிந்தார்கள்.

நபி (ﷺ) அவர்கள், "அந்த நேரத்தில் அவர்களிடம் உணவு தானியம் எதுவும் இருக்கவில்லை. அப்படி எதுவும் இருந்திருந்தால் அதிலும் வளம் வழங்கும்படி இப்ராஹீம் (அலை) அவர்கள் பிரார்த்தித்திருப்பார்கள்.




அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 3364 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 23

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மக்காவையும் மதீனாவையும் தவிர
தஜ்ஜால் கால்வைக்காத எந்த
ஊரும் இருக்காது.



அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புஹாரி 1881 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 24

நான்தான் மசீஹ் (அத்தஜ்ஜால்) ஆவேன். நான் (இங்கிருந்து) புறப்பட அனுமதிக்கப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

நான் புறப்பட்டு வந்து, நாற்பது நாட்களில் பூமியில் எந்த ஓர் ஊரையும் விட்டுவைக்காமல் பூமியெங்கும் பயணம் செய்வேன். மக்காவையும் தைபாவையும் தவிர! அவ்விரண்டிற் குள்ளேயும் நுழைவது எனக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்விரு நகரங்களில் ஏதேனும் ஒன்றில் நுழைய நான் நாடும் போதெல்லாம் என்னை நோக்கி வானவர் ஒருவர் வருவார். அவரது கையில் உருவியவாள் இருக்கும். (அதை வைத்து) அதற்குள் நுழைய விடாமல் அவர் என்னைத் தடுத்துவிடுவார். அதன் ஒவ்வொரு நுழைவாயிலிலும் வானவர் ஒருவர் இருந்து, அதைக் காவல் காத்துக் கொண்டிருப்பார்' என்று கூறினான்.



அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புஹாரி 1881 (ஹதீஸின் ஒரு பகுதி)

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 25

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

மனிதர்களிலேயே அல்லாஹ்வின் (கடுமையான) கோபத்திற்கு ஆளானோர் மூவர் ஆவர்.

1. (மக்கா) புனித எல்லைக்குள் பெரும் பாவம் புரிகின்றவன்.

2. இஸ்லாத்தில் இருந்துகொண்டு அறியாமைக் காலக் கலாசாரத்தை விரும்புகின்றவன்.

3. ஒரு மனிதனின் இரத்தத்தைச் சிந்தச்செய்வதற்காக நியாயமின்றி அவனைக் கொலை செய்யத் தூண்டுகின்றவன்.




அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புகாரி 6882

# புனித மிகு மக்காவின் சிறப்புகள் 26

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

இஸ்லாம் குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்கள்  இடையேதான் தோன்றியது. அது தோன்றிய பழைய நிலைக்கே திரும்பிச்செல்லும். பாம்பு தனது புற்றில் (சென்று) அபயம் பெறுவதைப் போன்று இஸ்லாம் இரு பள்ளிவாசல்களில் (புனித மிகு மக்கா, மதீனா நகரங்களில்) அபயம் பெறும்.



அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 232